## சென்னை மெட்ரோ நிறுவனத்தில் வேலை இருப்பதாக

# போலி இணையதளம் தொடங்கி வாலிபர்களிடம் பல லட்சம் மோசடி

■ கேரள வாலிபர் அதிரடி கைது ■ 5 நாள் காவலில் எடுக்க முடிவு

சென்னை, ஜூலை 9: சென்னைமெட்ரோரயில் நிறுவனத்தில் வேலை இருப்பதாக நிறுவனத்தின் பெயரில் போலி இணையதளம் தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்களிடம் பல லட்சம் மோசடி செய்த கேரள வாலிபரை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்தனர்.

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்தில் அதிகாரிகள் முதல் உதவியாளர்கள் வரை பல்வேறு பணிகளுக்கு ஆட்கள் தேவை என்று மெட்ரோ ரயில் நிறுவனம் இணையதளம் போல் போலி இணையதளம் தொடங்கியும், வாட்ஸ்அப் மற்றும் சமூக வலைதளங்களில் பலர் மோசடியில் ஈடுபட்டு வருவதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது.

அதன்படி, மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து மெட்ரோ ரயில் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு குறித்து போலி இணையதளம் குறித்து விசாரணை நடத்தினர். அப்போது மெட்ரோ ரயில் நிறுவனத்தில் ஆட்கள் எடுப்பதாக கூறி டெல்லி வங்கி கணக்கு எண்களை கொடுத்து ₹3,250 கட்ட செலுத்தவேண்டும் என்று கூறி பலரிடம் போலியான பணி நியமன ஆணை மெயிலில் அனுப்பி அவர்களிடம் பயிற்சி கட்டணமாக ₹26 ஆயிரம் வசூலித்து மோசடி செய்தது தெரியவந்தது.



▶ ஸ்ரீஜித்

இதையடுத்து, மத்திய குற்றப்பிரிவு போலீசார் சென்னை அயனாவரத்தை சேர்ந்த மேன்பவர் ஏஜென்சி நிறுவனம் நடத்தி வந்த மரியதாஸ் (எ) தினேஷ் என்பவரை கடந்த 24ம் தேதி கைது செய்தனர். இதைதொடர்ந்து மத்திய குற்றப்பிரிவு போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது மெட்ரோ ரயில்லிமிடெட் நிறுவனத்தின் *www.chennaimetrorail.org* என்ற முகவரி போன்று *www.cmrlco.org* என்ற போலியான இணையதளம் உருவாக்கி, அதில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு இருப்பதாக போலியான விளம்பரங்களை கேரள மாநிலம் திரூர், விட்டோம் அருகே உள்ள திருமங்களத்துள்லட்டு வீடு என்ற ஊரை சேர்ந்த ஸ்ரீஜித் (34) என்ற வாலிபர் வெளியிட்டு ஆயிரக்கணக்கான வாலிபர்களை ஏமாற்றி பல லட்சம் மோசடி செய்தது தெரியவந்தது.

இதையடுத்து மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் தனிப்படை போலீசார் கேரள மாநிலத்திற்கு சென்று மோசடியில் ஈடுபட்ட ஸ்ரீஜித்தை நேற்று முன்தினம் கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இணையதளத்தில் உள்ள டிசைன், புகைப்படங்கள் மற்றும் தகவல்களை திருடி போலியான இணையதள முகவரியை உருவாக்கி வேலைவாய்ப்பு குறித்து போலியான விளம்பரங்களை வெளியிட்டு மோசடி செய்தது தெரியவந்தது.

இதையடுத்து, மத்திய குற்றப்பிரிவு போலீசார் ஸ்ரீஜித்தை நேற்று சென்னை அழைத்து வந்து அல்லிகுளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்த மோசடியில் பலர் பின்னணியில் உள்ளதால் கைது செய்யப்பட்ட ஸ்ரீஜித்தை மத்திய குற்றப்பிரிவு போலீசார் 5 நாள் போலீஸ் காவலில் எடுத்து விசாரணை நடத்த முடிவு செய்துள்ளனர். அதற்கான மனு தாக்கல் ஓரிரு நாளில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் மத்திய குற்றப்பிரிவு போலீசார் தெரிவித்தனர்.